## அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடலிற்கான மேலதிக நிதியளிப்பு செயற்திட்டம் - 2017

அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடலிற்கான மேலதிக நிதியளிப்பு செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 5445–எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் பொது நிபந்தனையின் 4.09(ஆ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மகாவலி அதிகாரசபை, நீர்ப்பாசனத் திணைக்களம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, நீர் வளங்கள் சபை, மாகாண சபைகள் மற்றும் இலங்கை மின்சார சபை என்பன செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன. பாரிய அணைக்கட்டுக்களின் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பிற்கான நீண்டகால நிலைபேறான ஒழுங்கமைப்புக்களை ஸ்தாபித்தல் மற்றும் இலங்கையில் நீர் வளங்கள் திட்டமிடலை முன்னேற்றுதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன. நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 11,154 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 84.50 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 10,956 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 83 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2014 ஒக்தோபர் 23 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2018 மே 15 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமன பட்டியலிட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக்

கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்ததா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(எ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஏ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஓ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடு

செயற்திட்ட கூறுகளின் கீழ் ஏற்பட்ட கிரயமாக பல்வேறு சொத்துக்கள் நேரடியாக சாட்டுதல் செய்யப்பட்டிருந்தமையால், நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் காட்டப்பட்ட ரூபா 802.48

மில்லியன் கூட்டுத்தொகையான சொத்துக்களின் தொடர்புடைய பெறுமதியுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 674.48 மில்லியன் கிரயமொன்றில் நிதிநிலைமைக்கூற்றில் காட்டப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி இணங்கியிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | நிதியளிப்பு உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடீஏ | 83.00 | 10,956.0 | 3,880.00 | 19.6 | 2,983.1 | 59.5 | 8,666.4 |
| இலங்கை அரசாங்கம் | 1.50 | 198.0 | 40.0 | 0.2 | 34.0 | 0.4 | 57.5 |
| **மொத்தம்** | **84.50** | **11,154.0** | **3,920.0** | **19.8** | **3,017.1** | **59.9** | **8,723.9** |

### 3.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் வேலை திட்டங்களின் பிரகாரம், நீர்ப்பாசன திணைக்களத்தின் வரம்பின்கீழுள்ள நீர்த்தேக்கங்களின் 15 அணைக்கட்டுக்களின் திருத்த வேலைகள், இலங்கை மஹாவலி அதிகார சபையின் வரம்பின் கீழ் தொடர்ந்தும் காணப்படும் நீர்த்தேக்கங்களின் 10 அணைக்கட்டுக்கள், வட மாகாண சபையின் வரம்பின் கீழ் தொடர்ந்தும் காணப்படும் நீர்த்தேக்கங்களின் 03 அணைக்கட்டுக்கள், இலங்கை மின்சார சபையின் வரம்பின்கீழுள்ள நீர்த்தேக்கமொன்றின் அணைக்கட்டு மற்றும் கண்டி மாநகர சபையின் வரம்பின் கீழ் தொடர்ந்தும் காணப்படும் நீர்த்தேக்கங்களின் 02 அணைக்கட்டுக்கள் என்பன 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. அவற்றில், நீர்ப்பாசன திணைக்களத்தின் வரம்பின் கீழ் 08 அணைக்கட்டுக்களின் திருத்த வேலைகள், இலங்கை மஹாவலி அதிகாரசபையின் வரம்பின்கீழுள்ள 05 அணைக்கட்டுக்கள் மற்றும் ஏனைய ஒவ்வொன்றும் 03 நிறுவனங்களின் கீழுள்ள 03 அணைக்கட்டுக்கள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. 2017 திசெம்பர் 31 வரையிலும் நீர்ப்பாசன நீர்ப்பாசன திணைக்களத்தின் வரம்பின்கீழுள்ள பூர்த்திசெய்யப்படாத திருத்தும் வேலைகளின் மீது காலவரையற்ற நீடிப்புக்கள் வழங்கப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2015 யூன் 30 வரை செயற்பட்ட ‘‘அணைக்கட்டு பாதுகாப்பு நீர் வளங்கல் திட்டமிடல் செயற்திட்டம்’’ என்றழைக்கப்பட்ட முன்னைய செயற்திட்டத்தினை மூலம் நேரத்தில் பூர்த்தியாக்கப்படாது தொடர்ந்தும் காணப்பட்ட பல்வேறு அணைக்கட்டுக்களின் திருத்த வேலைகள் இந்த செயற்திட்டத்திற்கு மாற்றஞ்செய்யப்பட்டிருந்ததுடன் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், அந்த வேலைகள் 2017 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

(i) இந்த செயற்திட்டத்திற்கு மாற்றஞ்செய்யப்பட்ட அணைக்கட்டு பாதுகாப்பு நீர் வளங்கல் திட்டமிடலுக்கான முன்னைய செயற்திட்டத்தின் நிதிசார் உடன்படிக்கையின் 01(என்) பந்தியின் பிரகாரம் நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பொல்கொல்ல சுரங்கப்பாதையின் திருத்த வேலைகளின் தேவைகளின் இனங்காண்பதற்கான ஆய்வு வேலைகளொன்று மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) முன்னைய செயற்திட்டத்திலிருந்து மாற்றஞ்செய்யப்பட்ட அமுல்படுத்தல் முகர்களுக்கான மதகு பீப்பாய் பரீட்சிப்பு கருவிகளின் பெறுகை மீதான நடவடிக்கைகள் ரூபா 14 மில்லியன் கிரயமொன்றில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டதுடன் கைவிடப்பட்டிருந்தது. மேலும், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் புவியியல் ஆராய்ச்சி நிலையத்தின் வசதிகளினை முன்னேற்றுவதற்கு 2017 இல் ரூபா 30 மில்லியன் தொகையான ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்வதற்கு பட்டியல்படுத்தப்பட்ட வேலைகள் கூட கைவிடப்பட்டிருந்தது.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தெஹியத்தகண்டியவிலுள்ள முவஹம்மன தொட்டி அணைக்கட்டின் திருத்த வேலைகளினை பூர்த்தி செய்வதற்கான காலம் 2018 மார்ச் வரை நீடிப்புச் செய்யப்பட்ட போதிலும், அணைக்கட்டின் சிவில் நிர்மாண வேலைகள், அணைக்கட்டு முகட்டு வீதியின் புனர்நிர்மாண வேலைகள், மதகு வாயில்களின் திருத்தங்கள், வெளியேற்ற அமைப்புக்கள் மற்றும் ஏனைய 02 கிளை கால்வாய்களுக்கு இணைக்கப்பட்டுள்ள கால்வாய்களின் திருத்தங்கள், வீதி பராமரிப்பு மற்றும் கால் வடிகட்டிகளின் நிர்மாணம், கள உத்தியோகத்தர்களுக்கான கட்டிடங்கள் மற்றும் நடைபாதை நிர்மாணத்தின் பரீட்சிப்பு போன்ற ஒப்பந்தத்தின் கீழுள்ள பாரிய வேலைகள் 2018 மார்ச் 08 இல் மேற்கொள்ளப்பட்ட கள விஜயத்தில் அந்தத் திகதியில் உள்ளவாறு ஆரம்பிக்கப்பட்டிருக்காமையினை வெளிப்படுத்தியது. ஆகையினால், நீடிப்புச்செய்யப்பட்ட காலப்பகுதியின் போது தொடர்புடைய வேலைகளின் பூர்த்தியாக்கலுக்கான சாத்தியக்கூறு தொடர்ந்தும் சந்தேகத்திற்குரியதாகக் காணப்படுகின்றது.

(ஆ) இலங்கை மஹாவலி அதிகாரசபையின் கீழ் பொல்கொல்லயிலுள்ள அணைக்கட்டு மற்றும் நீர்த்தேக்க முகாமைத்துவ நிலையத்திற்கான புதிய கட்டிடமொன்றின் நிர்மாணம் மற்றும் தற்போது காணப்படுகின்ற கட்டிடத்தின் பழுதுதுபார்த்தலுக்கு ரூபா 262.09 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயமொன்றில் 2016 நவம்பர் 24 இல் ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வளாகத்தில் தற்போது குடியிருக்கின்ற தர்ப்பினர்களினால் கட்டிடத்திலிருந்து வெளியேற மறுத்தமையினால், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தத்தின் கீழுள்ள வேலைகளினை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது.

(இ) பெறுகைகள் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 113.54 மில்லியன் தொகையான ஒதுக்கீட்டின் கீழ் கட்டிடமொன்றின் நிர்மாண வேலைகள் மற்றும் அனுராதபுரத்திலுள்ள நீர் வள நிலையத்தின் புதிய இரசாயனவியல் ஆய்வுகூடத்திற்கு தேவையான ஆய்வு உபகரணங்களின் பெறுகை அந்தத் திகியில் உள்ளவாறு பூர்த்தியடைந்த வேலையொன்றாக அதனை செயற்திட்டம் அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், 2018 மே 31 வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

**3.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அணைக்கட்டு பாதுகாப்பு தேசிய நிலையத்திற்கான கட்டிடமொன்றின் நிர்மாண வேலைகள் 2017 மே 16 இல் ரூபா 25.17 மில்லியன் கிரயமொன்றில் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 வரை குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 இல் ரூபா 37.40 மில்லியன் கிரயமொன்றில் இலங்கை நீர் தர முகாமைத்துவ ஆராய்ச்சி நிலையத்திற்கு மஹாவலி அதிகாரசபையினால் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள், ஆராய்ச்சி நிலையத்திற்கான கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருக்காமையினால், 2017 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்படாது தொடர்ந்தும் காணப்பட்டது. அந்த உபகரணங்களில் ரூபா 26.50 மில்லியன் பெறுமதியானவை அந்த திகதியில் உள்ளவாறு வழக்கற்கு போனதாகத் தொடர்நதும் காணப்பட்டது.

**3.5 நிதிக்கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் மீது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அளவைச் சபை 2017 மே 31 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, ரூபா 802.5 மில்லியன் கிரயமொன்றில் செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் பௌதீக உள்ள தன்மையினை நம்பத்தகுந்ததாக உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) ரூபா 36 மில்லியன் கிரயமொன்றில் கொள்வனவு செய்யப்பட்ட 03 இரட்டை நோக்க மோட்டார் வாகனங்கள், கணனிகள், தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் போன்ற சொத்துக்கள் 2015 இல் செயற்பாடுகளினை மூடியிருந்த அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கல் திட்டமிடல் செயற்திட்டத்திலிருந்து செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தொடர்புடைய சொத்துக்கள் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற போதிலும், சொத்துக்களினை மீள்பெறுமதியிட்டு கணக்கிற்குக் கொண்டுவருவதற்கு செயற்திட்டத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.